# SrTOA தேர்வும் பாதிக்கப்படும் தோழர்களும்

கடந்த 4 ஆண்டுகளின் தொடர் முயற்சியால் விடுபட்டுப்போன TOA தோழர்களுக்கு SrTOA தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. BSNL ஆன 2000 இறுதியிலிருந்து TOA யின் பல பிரிவுகளுக்கு பரிவு அடிப்படையில் அமர்த்தப்பட்ட ஊழியர்கள், நூற்றுக்கணக்கானவர்கள்- SrTOA ஆக முடியாத நிலை நீடித்துவந்தது.

நமது தஞ்சை மாநில மாநாட்டில் இது குறித்து நடந்த விவாதத்தில் பிரச்சனையின் தன்மையை தோழர்களுக்கு தெளிவு படுத்தினோம். சென்ற தேர்தலில் நமக்கு கிடைத்த Quarterly Meeting வாய்ப்பை பயன்படுத்தி அதிகாரபூர்வமாக இப்பிரச்சனையை மாநில நிர்வாகத்துடன் விவாதித்தோம். தீர்விற்கு பல்வேறு வழிமுறைகளை எடுத்துரைத்தோம். FNTO தலைமையும் நம்முடன் நின்றது. BSNLEU தலைமையும் JCMல் விவாதித்தது.

தமிழ் மாநிலத்தின் மூன்று பெரும் சங்கங்களின் தொடர் முயற்சியால் மாநில நிர்வாகம் கார்ப்பரேட் அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்விற்கு உதவியது. தேர்வு ஆக 28 என அறிவித்துள்ளது.

ஆனால் TOA G அல்லாத மூத்த ஊழியர்கள் இத் தேர்விலோ அல்லது Walk in Groupலோ இடம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 2003க்கு பிறகு TOA G அல்லாத பிற பிரிவுகள் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

(c)Since in the pre-restructured cadre of all four streams i.e. TOA (G), TOA (P), TOA (TG), TOA (TL), practically there has been no induction since almost 18 years except through certain compassionate ground appointments in TOA (G) cadre, it has therefore been **decided to declare the cadres of TOA (P)/ TOA(G)/ TOA(TG)/TOA(TL)** in BSNL as **wasting cadres**. There would, **henceforth, be no induction in any of these pre-restructured cadres by** any

(d)means including compassionate appointments. The existing posts occupied by the officials in these four pre-restructured cadres will be personal to them and shall stand abolished once the officials vacate the posts on account of retirement/ resignation/ promotion etc.

(No 27-8/2003- TE –II (ii) Dated:18th November, 2003)

2003 வரை அமர்த்தப்பட்ட TOA P, TOA TL, TOA TG போன்றவர்கள் 2007RR காரணமாக இத் தேர்வில் இடம் பெற முடியாமல் போயுள்ளது. TOA G போக இடமிருந்தால்தான் இத்தோழர்களுக்கு வாய்ப்பு, அதுவும் அதற்கென தனியான நிர்வாக நடவடிக்கை தேவை.

RR 2007 12 3

" Available vacancies if any left on account of recruitment process as per serial 1 and 2 above shall be filled up by promotion from confirmed **TOA T TOA P TOA TG** on basic grade having 4 years of regular service in the cadre possessing 10+2 standard or equivalent qualification. Those who do not possess the qualification of 10+2 standard or equivalent qualification shall be considered on the basis of a screening test.

Sr TOA கேடரில்அனைத்து பிரிவுகளும் merge செய்யப்பட்டு SrTOA G என்ற பிரிவு மட்டுமே live கேடராக ஆக்கப்பட்டது. ஆனால் TOA கேடரில் merger நடைபெறவில்லை.

மாநில நிர்வாகத்திடம் இது குறித்து எடுத்து சொல்லியுள்ளோம். தேவையற்ற திரும்ப திரும்ப செய்யவேண்டிய நிர்வாக நடைமுறையும் கால தாமதமும் நமது தோழர்களின் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ளன. ஆளெடுப்பு விதிகளை மாற்றுவதில் சிக்கல் எழலாம். ஆனால் இத் தோழர்களையும் நிபந்தனையுடன், TOA G போக மீதியிடமிருந்தால் அந்த இடங்களுக்கு அனுமதிப்பது என்ற நிலை எடுத்தால் கால விரயத்தை தடுக்கலாம்.

இப்பிரச்சனை குறித்து நமது அகில இந்திய அமைப்பை பேச சொல்லியுள்ளோம். FNTO தலைமையும் பேசுவதாக இருக்கிறது. BSNLEU அகில இந்திய தலைமையும் தலையிடும் என கருதுகிறோம்.

5-6-11